முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

05.09.2024

1. ஞான சேய்களே என் மக்களே
நம்பிக்கை தந்து சன்மார்க்கத்தை
தானதரும பலம்தனை கொண்டு
தரணியெங்கும் பரப்பி வருகின்ற

2. வருகின்ற அரங்கமகான் என்படைகளே
வணங்கி வாழ்த்தி அரங்கனும்
தருகின்றேன் குருவார அருளாசி
தக்க குரோதி யாளி திங்கள்

3. திங்களிலே சூலவாம் குருவாரமதற்கு
தேசிகனும் அருளாசி வழங்குவேன்
ஓங்கார நாதம் பாடி வருகின்ற
உயர் மக்கள் என் மக்களப்பா

4. அப்பப்பா சரவண சோதி ஏற்றி
அனுதினமும் வணங்கி கேட்க
தப்பாமல் கோரிக்கை யாவும்
தானாக நிறைவேறும் என்பேன்

5. என்கவே மகா குருவாரமதில்
என் நாமம் எந்த இல்லில்
சண்முகா சரவணா முருகா என
சற்குருவே அரங்கா என பூசையாக

6. ஆகவே நாமசெபமாகவே
அழைக்கப்படுகின்றதோ அங்கே
மகான் அரங்கன் யானிறங்கி
மகத்துவம் பல புரிந்தருள்வேன்

7. அருளவே என் தரும வழிமுறை
அகிலத்தில் எவர் பின்பற்றி
பெருமளவிலும் தம்மால் இயன்ற
பேதமற சிறிதாகச் செய்து வந்தாலும்

8. வந்திடும் மாந்தர்கள் எல்லாம்
வானவர்கள் வாழ்த்தும்படி
இந்தப் புவியில் எல்லா வளமும்
இனிதே பாதுகாப்பும் கண்டடைவர்

9. அடையவே சன்மார்க்க வழி
அடைபவருடன் அவர் குடி மாற்றி
தடையற அவன் சமூகமுடன்
தரணியையே தேற்றும் சக்தி மிக்கதாகும்

10. ஆகவே கலியுக மக்கள்தானும்
அரங்கன் என் ஜீவ தடம்
வகைபட வந்து வணங்கி
வழிகாட்டுங்கள் என கேட்டு

11. கேட்டுமே தருமத்தில் உதவி
குருமார்க்கம் சன்மார்க்கமே என
வாட்டமற பிறவிப் பயனடைவீர்
அரங்கமகான் யான் அருளிய குருவார அருளாசி முற்றே.

–சுபம்–